www.malankaralibrary.com



# மரியாவைக் கொண்டாடுவோம்

அருட்தந்தை மரிய ஜாண்

www.malankaralibrary.com

# மரியாவைக் கொண்டாடுவோம்

மலங்கரை சார்ந்த
விளக்கங்களுடன்

*ஆசிரியர்*

*அருட்தந்தை மரிய ஜாண் நடைக்காவு*

## நூல் விபரம்

நூலின் பெயர் ப்மரியாவைக் கொண்டாடுவோம்

www.malankaralibrary.com

நூலாசிரியர் ûஅருட்தந்தை மரிய ஜாண்

உரிமை ûஆசிரியருக்கே

வெளியிடுவோர் ûதனிச்சுற்று

முதற்பதிப்பு ûÃ..ü.ÀüÃ..ÃÀ

நூல் அளவு : A4ú

எழுத்துரு ûLathaúÀ...புள்ளி

பிரதிகள் : 100

நூலாசிரியர் முகவரி : ஆயர் இல்லம், வெட்டுவெந்நி, மார்த்தாண்டம், குமரி மாவட்டம், தமிழ்நாடு, –Ã” À–œë

தொடர்புக்கு : Emailûfrmariajohn@gmail.com

## எனதுரை

தற்போது நான் பணியாற்றும் பங்கில் மறையுரைகள் வாயிலாக குறைந்த நேரத்தில், நல்ல கருத்துக்களை, எளிய நடையில், சரியான மொழியில், காகிதத்தில் பதித்து வைத்தவாறு மக்களுக்கு அவற்றை போதிக்க

www.malankaralibrary.com

வேண்டும் என்பர். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மறையுரைகளை பல நாட்களிலும் வீட்டில் சென்று மீண்டும் வாசித்து அறிந்திட மறையுரைகளுக்குப் பின்னர் வாங்கிச் செல்வர். இத்தகைய மறையுரைகளை தயாரிக்க பல்வேறு கட்டுரைகளை இணையதளத்தில் இருந்தும் நூல்களிலிருந்தும் வாசித்து சேகரிக்க வேண்டிய தருணம் ஏற்படும். அவ்வாறு மரியாவின் விழாக்களைப் பற்றிய பல்வேறு புதிய கருத்துக்களையும் அவற்றின் தோற்றம் மற்றும் வரலாறு பற்றிய கருத்துக்களையும் அறிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு நான் அறிந்த காரியங்களை பிறரும் அறிந்திட உதவும் வகையில் எளிய தமிழ் மொழியில் „மரியாவைக் கொண்டாடுவோம்“ என்னும் இந்நூலை மறையுரைகள் வடிவில் சமர்ப்பிக்கிறேன். மரியாவைப் போற்றும்

www.malankaralibrary.com

பல்வேறு திருநாள்கள் திருச்சபையில் கடைபிடிக்கப்படுகின்றன.

இந்நூலில் எட்டு திருநாள்களைப் பற்றியக் கருத்துக்களை மட்டுமே மறையுரைகளாக இந்நூலில் தொகுத்துள்ளேன். நம் ஆலயங்களில் இத்தகைய மரியாவின் திருநாள்கள் பற்றிய பின்னணியை சுருக்கமாக விளக்கிட இந்நூல் மிகவும் உதவும் எனக் கருதுகிறேன்.

துய மரியா நம் வாழ்வுக்கு வழிகாட்டியாய் அமையட்டும். தூய மரியே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்! மரியே வாழ்க!

அருட்தந்தை மரிய ஜாண்

www.malankaralibrary.com

## உள்ளடக்கம்

1. மரியன்னையின் பிறப்புத் திருநாள்

2. மரியன்னையின் விண்ணேற்புத் திருநாள்

3. செபமாலை அன்னை திருநாள்

4. மரியா திருச்சபையின் தாய் திருநாள்

5. மரியாவின் புகழ்ச்சித் திருநாள்

6. வியாகுல அன்னை திருநாள்

7. பாத்திமா அன்னை திருநாள்

8. லூர்து அன்னை திருநாள்

# 1. மரியன்னையின் பிறப்புத் திருநாள்

இறையேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே இறை அன்னை மரியாவின் பிறப்பு விழாவைக் கொண்டாடி மகிழும் உங்களுக்கு எல்லாவிதமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.



*மரியாவின் பிறப்பு*

கத்தோலிக்கத் திருச்சபையின் திருவழிபாட்டு வரலாற்றில் ஆண்டவர்

www.malankaralibrary.com

கிறிஸ்துவின் பிறப்புத் திருநாளை டிசம்பர் Ãœஆம் நாள் வெகுவிமரிசையாக நாம் கொண்டாடுகின்றோம். பின்னர் வருகின்ற மூன்றாவது மாதத்தில் மார்ச்சு 25 ஆம் நாளில் மங்கள வார்த்தை திருநாளை கொண்டாடுகிறோம். பின்னர் வருகின்ற மூன்றாவது மாதத்தில் திருமுழுக்கு யோவானின் பிறப்புத் திருநாளை ஜூன் ÃŒஆம் நாளில் கொண்டாடுகின்றோம். பின்னர் வருகின்ற மூன்றாவது மாதத்தில் அன்னை மரியாவின் பிறப்புத் திருநாளை செப்டம்பர் 8 ஆம் நாளில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றோம். பல்வேறு கிழக்கு மரபுவழித் திருச்சபைகள் இன்று அன்னையின் பிறப்புத் திருநாளை வெகுவிமரிசையாக கொண்டாடி மகிழ்ந்து வருகின்றன.

இந்திய நாட்டில் குறிப்பாக கேரள மாநிலத்தில் பழங்காலம் முதலே இவ்விழாவை கொண்டாடி வருவது நாம் அறிந்த உண்மையே. நமது மறைமாவட்டத்தில் ஏறக்குறைய இருபது வருட மரபில், எட்டு நோன்பு விழா எனப் பெயரிட்டு அன்னையின் பிறப்புத் திருநாளை

www.malankaralibrary.com

எட்டு நாட்கள் கொண்டாடும் திருவிழாவாக வெகுவிமரிசையாக கொண்டாடி வருகின்றோம். அனைத்து நாட்களிலும் ஜெபமாலை, திருப்பலி, சிறப்பு மறையுரைகள், அன்னை நவநாள் ஜெபங்கள், சிறப்பு அன்னை பாடல்கள், நேர்ச்சைகள், விருந்துகள் மற்றும் மாபெரும் செபமாலைப் பவனி போன்றவற்றால் இவ்விழாவை நமது மறைமாவட்டத்தில் பல பங்குகளிலும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இவ்விழாவின் வரலாற்றுப் பின்னணி என்ன? ஆறாம் நூற்றாண்டில் ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் ஹனிபா என்ற இஸ்லாமிய பேரரசர் ஒருவர் அன்றைய கிறிஸ்தவ மக்கள் வாழ்ந்து வந்த பல நாடுகளை கைப்பற்றி இஸ்லாமிய பேரரசை உருவாக்கினார். மிகவும் அழகான பெண்களை இஸ்லாமியப் படை வீரர்கள் சீரழிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். இத்தகைய கொடூரத்தால் தாங்கள் சீரழியாமலிருக்க தூய மரியாவில் நம்பிக்கை கொண்டிருந்த பெண்கள் பலர் அந்நாட்டு பேராலயத்தில் மூன்று நாட்கள்

www.malankaralibrary.com

உபவாசம் இருந்து உருக்கமாக ஜெபித்தார்கள்.

இவ்வாறு ஜெபித்த தருணத்தில் மரியா குருவானவருக்கும் இறைமக்களுக்கும் காட்சியளித்து „பயப்பட வேண்டாம், நான் உங்களோடு இருக்கிறேன்" என்று ஆறுதல் வார்த்தை கூறுகின்றார். அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவர்களும் பெண்களும் அமைதியாக வாழ்ந்து வந்தனர். ஆண்டுதோறும் மூன்று நாட்களை எட்டு நாட்களாக நீட்டி நோன்பிருந்து மரியாவுக்கு நன்றி செலுத்தும் விதமாக அன்னையின் பிறப்பு விழாவை கொண்டாடத் துவங்கினர்.

இவ்வாறு அரபு நாடுகளில் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வந்த இந்த வழக்கம் இந்திய நாட்டில் எவ்வாறு நுழைந்தது என்பதை நாம் காண்போம். மூன்றாம் நூற்றாண்டு முதலே கிறிஸ்தவர்கள் பாரசீக நாடுகளிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறத் துவங்கினர். எட்டாம் நூற்றாண்டில் மிகப் பெரும்பான்மையான ஈராக் மற்றும் ஈரான் நாடுகளில் வாழ்ந்த சிரியன் கிறிஸ்தவர்கள் இந்தியாவின் தமிழக மேற்கு

www.malankaralibrary.com

கரையோரப் பகுதியான இன்றைய கேரளாவில் குடியேற்றம் அடைந்ததாக வரலாறு கூறுகிறது.

திப்பு சுல்தான் இந்தியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி மலபார் பகுதியை முழுவதுமாக கைப்பற்றி இஸ்லாமிய அரசை உருவாக்கி தொடர்ந்து இந்து மற்றும் கிறிஸ்தவ மக்களை கட்டாய மதமாற்றத்திற்கு உட்படுத்தி சித்திரவதை செய்து வந்தான். இவ்வாறு வன்முறைக்கு உட்பட்ட கிறிஸ்தவ மக்கள் திருவிதாங்கூர் பகுதிக்கு குடியேற்றம் அடைந்தனர். திப்பு சுல்தானும் ஆலுவா பகுதியில் பெரியார் எனப்படும் மிகப்பெரிய ஆற்றின் கரைப்பகுதி வரையிலும் வந்து தாவளம் அமைத்தான்.

அரபு நாடுகளிலிருந்து வந்த சிறியன் கிறிஸ்தவர்கள் ஏற்கனவே மேற்கொண்ட கொடூரமான நிலையை சமாளித்ததைப் போன்றே ஆலயத்தில் பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூட்டம் கூட்டமாக நோன்பிருந்து ஜெபித்தனர். அப்போது மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட திப்பு சுல்தானின் படை

பின்வாங்கியது. இத்தருணத்தில் திப்பு சுல்தானும் உள்நாட்டு போரில் இருந்து அரண்மனையை பாதுகாப்பதற்காக தன் சொந்த நாட்டுக்கு திரும்பி விடுகின்றான். கிறிஸ்தவ மக்கள் மரியாவுக்கு செலுத்துகின்ற நன்றியுணர்வாக எட்டு நாட்கள் தொடர்ந்து நோன்பிருந்து வெகு விமரிசையாக அன்னையின் பிறப்பு விழாவை கொண்டாடுகின்றனர்.

கோட்டயம் மணர்காடு ஆலயம் எட்டு நோன்பு விழாவுக்கு மிகவும் பெயர் பெற்ற திருத்தலம் ஆகும். பல்வேறு மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வந்து கூடி இந்த எட்டு நாட்களிலும் அன்னையை தரிசித்து ஆசி பெற்று செல்கின்றார்கள். ஏழாம் நாளில் நடைதிறப்பு திருநிகழ்வு மூலம் பலிபீட முன்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் அன்னையின் படத்தை தரிசிக்க ஆயிரக்கணக்கானோர் கூடுகின்றனர். வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே இந்நிகழ்வு நடத்தப்படுகிறது.

கால்நடைகளை மேய்த்து காட்டில் தனியாக மாட்டிக்கொண்ட பாலகர்களுக்கு

www.malankaralibrary.com

மரியா முத்தியம்மா உருவில் தோன்றி அவ்விடத்தில் நீரூற்றைத் தோன்றச் செய்து அவர்களது தாகத்தை தணிக்கச் செய்தார். குறவிலங்காடு என்னுமிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்திலும் எட்டு நோன்பு விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

ÀÀ..... ஆண்டு பழமையான தங்க நிறத்தால் வடிவமைக்கப்பட்ட தூயகத்தைக் கொண்ட அதிரம்புழை ஆலயமும் எட்டு நோன்பு விழாவுக்கு பெயர்பெற்ற ஆலயமாகும்.

கிணற்றிலிருந்து கயிறு மற்றும் வாளியைப் பயன்படுத்தி தண்ணீர் இறைக்கும் நேர்ச்சையைக் கொண்ட கடமாளூர் ஆலயமும் முக்கியமானதாகும். இஃது செம்பகசேரி அரசரால் 800 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட ஆலயம் ஆகும்.

மரியாவின் இடைக்கச்சையின் திருப்பண்டம் அமைக்கப்பட்டுள்ள மீனங்ஙாடி சூனோறோ ஆலயம் மலபார்

www.malankaralibrary.com

பகுதியில் எட்டு நோன்பு விழாவுக்கு பெயர் பெற்ற மிக முக்கிய ஆலயம் ஆகும்.

அன்னை மரியாவின் வாழ்வைப் பற்றி விவிலியத்தில் ஒரு சில நிகழ்வுகள் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. ஆனால் அவரது பிறப்பைப் பற்றியும் அவரது இளமைக் கால வாழ்வைப் பற்றியும் விவிலியத்தில் எவ்விதக் குறிப்புக்களும் இல்லை. ஆனால் திருமுறையை சாராத இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாக்கோபு நற்செய்தி என்னும் நூலில் மரியாவின் பிறப்பு பற்றியும் அவரது இளமை வாழ்வு பற்றியும் தெளிவாக எழுதப்பட்டுள்ளன.

எருசலேம் நகரில் வாழ்ந்து வந்த செல்வந்தரான யோவாக்கிம் அன்னா தம்பதிகள் குழந்தைப் பேறுக்காக இறைவனிடம் அதிகமாக நாள்தோறும் இடைவிடாமல் வேண்டிக்கொண்டிருந்தனர். அவர்களது முதிர்ந்த வயதில் இறைவன் ஒரு வானதூதர் வழியாக மரியாவின் பிறப்பை அவர்களுக்கு முன்னறிவிக்கின்றார். அப்போதே அவர்கள் குழந்தைப்பேறு பெற்றுக்கொண்டால் எருசலேம் ஆலயத்தில்

அர்ப்பணிப்பதாக நேர்ச்சை செய்து கொண்டனர். அவர்களுடைய விசுவாசமானது வீணாகவில்லை. பத்தாம் மாதத்தில் குழந்தை பிறக்க, „கடலின் நட்சத்திரம்“ என்ற பொருள் கொண்ட „மரியா“ என்ற பெயரை குழந்தைக்கு சூட்டுகின்றார்கள்.

பெற்றோரின் நேர்ச்சை போன்றே ஆலயத்திலும் இறை காரியத்திலும் ஆர்வமுடையவராக மரியா வளர்கின்றாள். எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு விவிலிய நூல்களை வாசிப்பதிலும் கற்பதிலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆலயம் சார்ந்த அனைத்து காரியங்களிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்தார். குறிப்பாக ஆலயத்தில் திரைச் சீலைகள் நெய்யும் தொழிலில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆலயச் சீரமைப்புப் பணிகளுக்காக தம் வாழ்வின் அதிக நேரத்தையும் செலவிட்டாள்.

ஆக மரியா தன் பெற்றோருக்கு உகந்த அன்பான செல்லப்பிள்ளையாக வாழ்ந்து வந்தார். தன் பெற்றோருக்கு எவ்வாறு அவர் இணக்கமானவராக இருந்தார் என்பதைப்

www.malankaralibrary.com

பற்றி விவிலியம் குறிப்பிடவில்லை எனினும் அவரது மகன் இயேசுவின் வாழ்விலிருந்து மரியாவின் நற்குணங்களை உணர்ந்து கொள்ள முடியும்.

நம் மலங்கரை கத்தோலிக்க திருவழிபாடு மரியாவுக்கு மிக முக்கியமான இடத்தை வழங்கியுள்ளது. „வானதூதர்களின் ஆண்டவர் இறங்கிக் குடிகொண்ட உடலாகிய மணிரதமே நீ பேறுபெற்றவள்“ என நாம் நான்காம் புறுமியோன் மன்றாட்டின் போது மரியாவின் புகழை வானளாவ புகழ்கின்றோம். நம் தேவைகளை அவளிடம் கூறி பரிந்துரை வேண்டி மன்றாடுவோம்.

திருச்சபையின் தாயாம் மரியாவின் பிறப்புத் திருநாளை கொண்டாடும்போது குடும்பங்களில் நம் அன்னையர்களின் நலன் வேண்டியும் இறையன்னையோடு மன்றாடுவோம்.

www.malankaralibrary.com

## 2. மரியன்னையின் விண்ணேற்புத் திருநாள்

இன்றைய தினம் ஆகஸ்டு மாதத்தின் 15 ம் நாளில் மலங்கரை கத்தோலிக்க திருச்சபை இந்திய திருச்சபையினரோடு இணைந்து மரியாவின் விண்ணேற்பு விழாவையும் இந்தியத் திருநாட்டின் விடுதலைப் பெருவிழாவையும் ஒன்றாக கொண்டாடுவதற்கு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இன்றைய நாளில் இந்த விழாக்களின் உண்மையான அர்த்தங்களை புரிந்தவாறு அவற்றை பக்தியுடனும் சிறப்புடனும் கொண்டாடுவதற்கு நாம் ஒவ்வொருவரும் தயாராவோம்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னால் விண்ணேற்றத் திருநாளை கொண்டாடினோம். இன்றைய தினம் விண்ணேற்புத் திருநாளை கொண்டாடுகின்றோம். விண்ணேற்றத் திருநாளுக்கும் விண்ணேற்புத் திருநாளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை நாம் கட்டாயமாக புரிந்து கொள்ளல் வேண்டும்.

www.malankaralibrary.com

இறைவனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் விண்ணுலகத்திற்கு தாமாகவே ஏறிச் சென்றார். இதனை ஆங்கிலத்தில் **அசன்ஷன்** என்பர். அசன்ஷன் என்ற சொல்லுக்கு **மேல் நோக்கி செல்லல்** என்பது பொருள். இதைத்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய விண்ணேற்றம் என்று கூறுகின்றோம்.

மரியாவின் விண்ணேற்பை ஆங்கிலத்தில் **அசம்ப்ஷன்** என்பர். அசம்ப்ஷன் என்ற சொல்லுக்கு **ஏற்றுக் கொள்ளப்படல்** என்பது பொருள். மனித குலத்தின் மரியாவோ, இறைவனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை போன்று தாமாகவே விண்ணகத்திற்கு ஏறிச் செல்ல முடியவில்லை. மாறாக மரியாவின் தூய்மையான வாழ்க்கையினால் இறைசன்னிதியில் ஒன்றிணைய விண்ணகத்திற்கு ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றாள். இந்நிகழ்வையே நாம் மரியாவின் விண்ணேற்பு என்று கூறுகின்றோம்.

www.malankaralibrary.com



*திருத்தூதர்களின் உடனிருப்பில் மரியாவின் இறப்பு*

மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா எவ்வாறு திருச்சபையில் தோன்றியது என்பதை பற்றி பார்ப்போம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தனது சிலுவை மரணத்தின் போது திருச்சிலுவையில் வைத்து திருத்தூதர் யோவானிடம் „இதோ உனது தாய்" எனவும், „இதோ உனது மகன்" என்று மரியாவிடமும் வெளிப்படுத்தினார். இந்த சொல்லுக்கு ஏற்ப திருத்தூதர் யோவான் அன்னை மரியாவை தனது சொந்தத் தாயாகவே கருதி இறுதி வரையிலும் அவரை கவனித்து வந்தார். மரியா தனது முதிர்ந்த வயதில் இறக்கும் நேரத்தில் எருசலேமில் தங்கி இருந்ததாக கருதப்படுகிறது. உலகின் பல்வேறு

இடங்களுக்கு மறைப்பணிக்காக சென்றிருந்த திருத்தூதர்கள் பலரும் மரியாவை சந்தித்து இறுதி ஆசீரை வழங்கினர். இறுதிச் சடங்குகளையும் நடத்தினர். இவ்வாறாக அவரது மரணத்திற்குப் பிறகு மரியாவின் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது.

ஆனால் தொலைதூரத்தில் மறைப்பணியாற்றிக் கொண்டிருந்த திருத்தூதர் தோமாவால் சரியான நேரத்தில் மரியாவின் அடக்க நிகழ்விலேயே கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்த முடியவில்லை. அவர் மற்ற திருத்தூதர்களோடு நான் கட்டாயமாக மரியாவின் முகத்தை கல்லறையில் பார்க்க வேண்டும் என்று அடம் பிடிக்கின்றார். மிகவும் அடம்பிடித்த காரணத்தினால் திருத்தூதர்கள் அனைவரின் ஒப்புதலோடு மரியாவின் கல்லறை மீண்டும் திறக்கப்படுகிறது. அப்போது அங்கே மரியாவின் உடல் இல்லை. ஆனால் கல்லறையிலிருந்து மூலிகைகளின் நறுமணம் வீசத் தொடங்கியது. அனைவரும் வியந்திருக்க இதே நேரத்தில் திருத்தூதர் தோமாவுக்கு மரியா காட்சி அளித்து, தான்

www.malankaralibrary.com

உடலோடு விண்ணக மாட்சிமையில் வீற்றிருப்பதாக வெளிப்படுத்துகின்றார்.

இந்தக் கருத்தானது இன்றும் கிழக்கு மரபுவழி திருச்சபைகளில் வெகுவிமரிசையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. கிழக்கு ஆர்த்தடோக்ஸ் திருச்சபையினரின் ஆலயங்களில் இவ்வுண்மையை வெளிப்படுத்துகின்ற பல்வேறு கலைவடிவங்களை நம்மால் காண முடிகின்றது. கிழக்குத் திருச்சபைகளில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த மரியாவின் விண்ணேற்புத் திருநாளானது எட்டாம் நூற்றாண்டில் திருத்தந்தை நான்காம் லியோ அவர்களால் மேற்குத் திருச்சபையிலும் அகில உலக திருச்சபையிலும் கொண்டாடக் கூடிய முக்கியத் திருநாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்று அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் ஆகஸ்ட் 15ஆம் தேதி மரியாவின் விண்ணேற்பு தினமாக மக்கள் அனைவரும் இந்நாளை வெகுவிமரிசையாக கொண்டாடி வருகின்றார்கள். குறிப்பாக சில நாடுகள் இதனை தேசிய விடுமுறை நாளாக அறிவித்துள்ளன. இன்றும் கிரேக்கத்

www.malankaralibrary.com

கத்தோலிக்கத் திருச்சபை மற்றும் பல ஆர்த்தடோக்ஸ் திருச்சபைகள் இந்தத் திருவிழாவை 15 நாட்கள் வரை கட்டாய நோன்பிருந்து வெகுவிமரிசையாக கொண்டாடி வருகின்றனர். மரியாவின் கல்லறையிலிருந்து நறுமணம் வீசிய நிகழ்வை நினைவு கூர்ந்திட இந்நாளில் மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து மூலிகைகளை ஆலத்திற்கு கொண்டு வருகின்றனர். திருப்பலியின் போது மூலிகை ஆசீர்வதிக்கும் சிறப்பு நிகழ்வும் நடைபெறுகிறது.

„மரியாவின் நினைவு நாள்“ப் „மரியா துயில்கொண்ட திருநாள்“ மற்றும் „மரியாவின் விண்ணக பிறப்புத் திருநாள்“ என்ற பல்வேறு பெயர்களில் இந்த விழாவானது கொண்டாடப்பட்டு வந்தது. எட்டாம் நூற்றாண்டிற்கு பின்னர் தான் „மரியாவின் விண்ணேற்புத் திருநாள்“ என்ற பெயர் சூட்டப்பட்டது. 1950 ஆம் ஆண்டில் திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் மரியா விண்ணேற்பு அடைந்ததை கிறிஸ்தவ விசுவாச உண்மையாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். இன்று கத்தோலிக்க

www.malankaralibrary.com

திருச்சபையில் இஃது பெருவிழாவாகவும், கடன்திருநாளாகவும் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15-ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவின் விடுதலையை 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாளில் அறிவித்தார்கள். இந்த ஆகஸ்ட் 15 ஆம் நாளன்று ஐரோப்பிய நாடுகளிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மரியாவின் விண்ணேற்புத் திருநாளையே இந்தியாவின் விடுதலை தினமாக தேர்ந்தெடுத்தனர். மரியாவின் விண்ணேற்புத் திருநாளின் போது நாம் பெற்றிருக்கும் விடுதலையை இணைந்து அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும். அன்னை மரியா இவ்வுலக வாழ்வில் தீமையின் அடிமைத்தனத்தில் விழாமல், தனது தூய்மையான வாழ்வின் வழியாக விடுதலை பெற்று விண்ணிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு இறைவனோடு ஒன்றாக இணைந்து இருக்கின்றார். அவ்வாறே நாமும் ஆங்கிலேயரின் அடிமை நிலையிலிருந்து உண்மையான விடுதலை பெற்று சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை பெற்றுக்கொண்டுள்ளோம். மரியா தான்

www.malankaralibrary.com

பெற்றுக்கொண்ட விண்ணகப் பேரின்பத்தை நாமும் வாழும் மனிதர்களுக்கிடையே பெற்றுக்கொள்ள முயல வேண்டும்.

இந்தியாவின் விடுதலை தின விழாவைக் கொண்டாடக் கூடிய இன்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும், விடுதலை அல்லது சுதந்திரம் என்றால் என்ன? நமது தாய்த் திருநாட்டிலேயே நான் என்னுடைய விருப்பம் போல எப்படிப்பட்ட நிலையிலும் வாழ்வேன், என் தனி விருப்பம் போல நான் செயல்படுவேன், என்று வாழ்வது அல்ல, உண்மையான விடுதலையும் சுதந்திரமும். நமது இந்தியத் திருநாட்டின் சட்டங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகள் பலவற்றையும் உட்கொண்டு, நாம் வாழ்கின்ற போது தான் விடுதலை என்னுடைய வாழ்வில் நிறைவு பெறுகின்றது. சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு சுதந்திரமாக வாழ வேண்டும். அவ்வாறாயின் மட்டுமே சுதந்திரத்தின் மேன்மையை நாம் புரிந்து கொள்ள முடியும். சட்டங்களையும் விதிமுறைகளையும் புறக்கணித்து வாழும் வாழ்வு விடுதலை வாழ்வு அல்ல. மரியாவும் தனது வாழ்வில்

www.malankaralibrary.com

மேற்குறிப்பிட்டவற்றை மதித்து அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து உண்மையான விடுதலை உணர்வோடு வாழ்ந்திருக்கின்றாள். எடுத்துக்காட்டாக, நாம் வாகனங்கள் ஓட்டுகின்ற போது, சாலை விதிகள் ஒவ்வொன்றையும் சரியாக மதித்து வாகனங்களை ஓட்டுகிறோம் என்றால் நிச்சயமாக எந்தவிதமான ஒரு விபத்தும் நாட்டில் ஏற்படுவதில்லை. விடுதலை என்பது என்னுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு சாலை விதிமுறைகளுக்கு எதிராக நான் வாகனத்தை ஓட்டுவது அல்ல. சட்டங்களுக்கு உட்பட்ட நிம்மதி உணர்வே விடுதலை வாழ்வு. சட்டங்களையும் ஒழுக்க முறைகளையும் கடைபிடித்துள்ளேன் என்ற உணர்விலேயே விடுதலையின் முழுமையை அடைகின்றோம். விதிகளுக்குட்பட்டு நான் சரியாக வாழ்ந்திருக்கிறேன் என்ற மனசாட்சியோடு வாழும் வாழ்வே உண்மையான விடுதலை வாழ்வு.

நாம் உறுப்பினர்களாக அமைந்திருக்கும் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை கூட 1930 ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையின் ஒன்றிப்பில் வந்து சேர்ந்ததன்

www.malankaralibrary.com

வழியாக பல்வேறு இடுக்கண்களிலிருந்தும் அதிகாரத்திற்கான பேராசையிலிருந்தும் விடுதலை பெற்றுக்கொண்ட சுதந்திரத் திருச்சபை ஆகும். மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் உறுப்பினராக நாம் பதினைந்து நாட்கள் நோன்பிருந்து மரியாவின் விண்ணேற்பு விழாவோடு இணைந்து இந்தியத் திருநாட்டின் விடுதலை விழாவை கொண்டாடுவதில் நாம் பெருமை கொள்வோம். மரியாவை முன்னுதாரணமாகக் கொண்டு விடுதலை உணர்வோடு நாம் நமது திருச்சபை வாழ்விலும் சமூக வாழ்விலும் சிறந்தோங்க முயல்வோம். அன்னை மரியாவின் பரிந்துரை வேண்டி நமக்காகவும், நம் நாட்டு மக்களுக்காகவும், நாட்டுத் தலைவர்களுக்காகவும் செபிப்போம். அன்னை மரியா ஒவ்வொருவருக்கும் ஏராளமான ஆசீர்வாதங்களை இறைவனிடமிருந்து பெற்றுத் தருவாராக.

## 3. செபமாலை அன்னை திருநாள்

www.malankaralibrary.com

„ஒவ்வொரு நாளும் செபமாலையை செபிக்கவும். மீண்டும் மீண்டும் பாவிகளின் மனமாற்றத்திற்காக செபிக்கவும். நானே செபமாலை அன்னை மரியா“. இவை பாத்திமா திருத்தலத்தில் மரியன்னை சிறுவர்களுக்கு காட்சி அளித்து செபமாலை செபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த சொற்களாகும்.

நம் கிறிஸ்தவ வாழ்வில் செபமாலை என்பது மிகவும் விரும்பி சொல்லக்கூடிய ஒரு செபமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. முற்காலங்களில் திருவழிபாட்டு நிகழ்வுகள் வேற்று மொழிகளில் சொல்லப்பட்டு கொண்டிருந்தபோது மக்கள் எளிதில் படித்து அறிந்திருந்த செபமாலையை எப்போதும் பயன்படுத்தி செபித்துக் கொண்டிருந்தனர். நம் சாதாரண வாழ்வில் தொலை தூர பயணம் செய்யும் போதும், நோய்களால் அவதிப்பட்டு இருக்கின்ற போதும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் செபிப்பதற்கு எளிதாக அமைந்திருப்பது திருசெபமாலையே ஆகும். இந்த அளவுக்கு நம் திருச்சபை வாழ்வில் செபமாலை மிகவும் முக்கியமான ஓர் இடத்தை கொண்டுள்ளது.

www.malankaralibrary.com

செபமாலை என்னும் பெயரை தாங்கிய தாய் மரியாவின் சிறப்புத் திருநாளை செபமாலை அன்னையின் திருநாள் என்ற பெயரில் நாம் கொண்டாடுகின்ற போது இன்றைய தினம் றோசரி, செபமாலை என்ற பெயர்களையோ பெயர்ச் சுருக்கத்தையோ தங்கள் பெயர்களாக கொண்ட அனைவருக்கும் பெயர் விழாவின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருசெபமாலையின் அர்த்தம் என்ன என்றும் அதன் வழியாக என்னென்ன நன்மைகளை நாம் பெற்றுக் கொள்கின்றோம் என்றும் நாம் அறிந்திருத்தல் நல்லது ஆகும்.

≥செபமாலையின் மலர்கள் என்றும் அழுகிப்போகாது” என்கிறார் திருத்தந்தை ÀÃஆம் பத்திநாதர்.

„கன்னி மரியாவுக்கு மிகவும் பிரியமான செபம் செபமாலை” என்கின்றார் திருத்தந்தை Ãஆம் யோவான் பவுல்.

www.malankaralibrary.com

≤மாலை நேரத்தில் செபமாலை செபிக்கும் குடும்பம் எவ்வளவு அழகானது" என்கிறார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

செபமாலை என்பதற்கு ஆங்கிலத்தில் பயன்படுத்துகின்ற சொல்லானது „**ரோசரி**" என்பதாகும். ரோசரி என்பதன் அர்த்தம் ரோஜா மலர்களால் வடிவமைக்கப்பட்ட மாலை என்பதாகும். உலகின் பல்வேறு மொழிகளில் இந்த அர்த்தத்திலேயே ரோசரி என்ற வார்த்தையானது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நம் தமிழ் மொழியில் மட்டுமே செபங்களை சொல்வதற்கு உதவி புரியக்கூடிய ஒரு மாலை என்ற பொருளில் செபமாலை என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுருக்கமாக இதனுடைய பொருளை „**ரோஜா மாலை**" எனவும் அழைக்கலாம்.

அன்னை மரியாள் ஒவ்வொரு முறையும் திருச்சபையில் காட்சியளிக்கின்ற போது செபமாலை செபிக்க வேண்டும் என்று அவர் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு ஒவ்வொரு முறையும் நாம் அருள் நிறை மரியே என்ற செபத்தை சொல்கின்ற போது அன்னை

www.malankaralibrary.com

மரியாவுக்கு நாம் ஒரு ரோஜா மலரை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம் என்று மரபு நம்புகின்றது. ரோஜா மலர் மலர்களுக்கெல்லாம் அரசியாக கருதப்படுகிறது.

ஒருமுறை நாம் செபமாலை செபித்து முடிக்கின்ற போது 5Ő ரோஜா மலர்களை அன்னை மரியாவுக்கு நாம் சமர்ப்பிக்கின்றோம் இந்தப் பொருளில்தான் ரோஜா மலர்களால் வடிவமைக்கப்பட்ட மாலையை அன்னை மரியாவிடம் நாம் சமர்ப்பிக்கின்றோம்.

செபமாலை என்பது அனைத்து மீட்பு நிகழ்வுகளையும் உள்ளடக்கிய செபங்களின் தொகுதி ஆகும். ஏனெனில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் நடைபெற்ற ஒவ்வொரு மீட்பு நிகழ்வுகளையும் நினைவுகூர்ந்து அன்னை மரியாவின் செபத்தையும் சொல்லி செபிக்கக்கூடிய விதத்தில் இஃது வடிவமைக்கப்பட்டுள்ளது.

மகிழ்ச்சியின் மறையுண்மைகள், துயரத்தின் மறையுண்மைகள், ஒளியின்

www.malankaralibrary.com

மறையுண்மைகள் மற்றும் மகிமையின் மறையுண்மைகள் என நான்கு மறையுண்மைகளின் தொகுப்புகள் உள்ளன. 2002 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் தனது திருத்தூதுவ மடல் வழியாக ஒளியின் மறையுண்மைகளை திருச்சபையில் அறிமுகப்படுத்தினார்.

தொடக்கக் காலத் திருச்சபையினர் 150 முறை ஆண்டவர் இயேசு கிறிஸ்து கற்பித்த பரலோகத்திலிருக்கிற என்ற செபத்தை சொல்லி வந்தார்கள். இந்த வழக்கம் மேலும் விரிவடைந்து 150 முறை அருள் நிறை மரியே செபத்தையும் செல்லக்கூடிய வழக்கம் உருவானது. வரலாற்றில் இத்தகைய வழக்கம் மீண்டும் நாளடைவில் விரிவடைந்த போது 150 முறை செபிக்கக் கூடிய செபங்களை எண்ணுவதற்கு வசதியாக ஒரு மாலை ஒன்று உருவாக்கப்பட்டது.

திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை, 6 முறை திரித்துவத்தின் புகழ், 6 முறை பரலோகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே என்ற செபம், 5Ŏமுறை அருள் நிறைந்த மரியே

www.malankaralibrary.com

செபம், ஒப்புக்கொடுத்தல் செபம், இறை அன்னைக்கு புகழ் மாலை, விண்ணக அரசியே என்ற செபம், குடும்ப சமர்ப்பண செபம், இரக்கம் நிறைந்த அன்னையே என்ற செபமும் முழு செபமாலையின் போது செபிக்கின்றவாறு உட்படுத்தப்பட்டுள்ளன.

அருள் நிறை மரியே என்ற செபத்தை மூன்று பகுதிகளாக நம்மால் பிரித்து பொருள் கூற முடிகின்றது. முதல் இரண்டும் வாழ்த்துப் பகுதிகளாகும்.

<u>முதல் பகுதி:</u> **„அருள்நிறை மரியே வாழ்க ஆண்டவர் உம்முடனே“** இந்த வார்த்தைகள் ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பின் போது கபிரியேல் தூதர் உரைத்த செய்திகளாகும். புனித லூக்கா நற்செய்தியில் 1ஆம் அதிகாரம் 28 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

<u>இரண்டாவது பகுதி:</u> **„பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே“ப்** இது மரியா

www.malankaralibrary.com

தன்னுடைய உறவினரான எலிசபெத்தை சந்திக்க சென்ற போது, எலிசபெத்து தாய்மரியாவைப் பார்த்து உன்னுடைய திருவயிற்றில் உள்ள குழந்தையும் நீரும் ஆசீர்வதிக்கப்பட்டவரே என்று வாழ்த்துரைத்த செய்தியானது லூக்கா நற்செய்தி 1ம் அதிகாரம் 42 ஆம் வார்த்தையில் உள்ளதை நாம் காண முடிகின்றது. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய என்ற பகுதியை „உமது திருவயிற்றின் கனியாகிய இயேசுவும்" என்று பதினான்காம் நூற்றாண்டில் திருச்சபையை வழிநடத்திய திருத்தந்தை நான்காம் அர்பன் என்பவரும் திருத்தந்தை இரண்டாம் யோவான் என்பவரும் மாற்றியமைத்தனர்..

<u>மூன்றாம் பகுதி:</u> ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஈன்றெடுத்த தாய் மரியாவை திருச்சபை தொடக்க காலம் முதலே மிகவும் முக்கியமானவராக கருதி போற்றிப் புகழ்ந்து வந்திருக்கின்றனர். புனிதர்களுள் முதன்மையானவராக கருதப்படக்கூடிய தூய அன்னை ஒவ்வொரு நபருடைய வாழ்க்கைச் சூழ்நிலையிலும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுவார் என்ற விசுவாசம் தொடக்கக்

www.malankaralibrary.com

காலம் முதலே நிலவி வந்தது. இதன் அடிப்படையில்தான் அருள்நிறை மரியே செபத்தின் மூன்றாவது பகுதி வேண்டுதல் பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு **„தூய மரியே இறை அன்னையே பாவிகளாகிய எங்களுக்காக இப்பொழுதும் எப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்"** என்று திருச்சபையினர் மன்றாடினர்.

இவ்வாறு வழக்கத்திலிருந்த வாழ்த்துப்பகுதிகளையும் வேண்டுதல் பகுதியையும் இணைத்து திருத்தந்தை ஐந்தாம் பயஸ் திருச்சபையில் அதிகாரப்பூர்வமாக அருள் நிறைந்த மரியே வாழ்க செபத்தை ஒழுங்கமைத்து செபமாலையை அதிகாரபூர்வமானதாக கத்தோலிக்க திருச்சபையில் அனைவரும் செபிக்க வேண்டும் எனவும் அறிக்கை வெளியிட்டார்.

1214 ஆம் ஆண்டு அன்னை மரியாவிடமிருந்து புனித டொமினிக் செபமாலையை பெற்றுக் கொண்டு திருச்சபைக்கு வழங்கியதாகவும்

www.malankaralibrary.com

நம்பப்படுகிறது. புனித டோமினிக் அன்று நிலவி வந்த மிகப் பெரிய தப்பறைக்கு உட்பட்டவர்கள் மற்றும் பாவிகளின் மனமாற்றத்திற்காகவும் தன்னுடைய துறவற இல்லத்தில் இருந்து வெளியேறி காட்டில் மூன்று நாட்கள் இரவும் பகலும் தன்னந்தனியாக தொடர்ந்து செபித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய முழுக்கவனத்தையும் இறைவன்பால் செலுத்திக்கொண்டு பாவிகளின் முழு மனமாற்றத்திற்கு அவர் ஆழமாக செபித்துக் கொண்டிருந்தார். தனது உடல் வலிமை இழந்த போதும் தன்னுடைய சீடர்களை நெருங்க விடாமல் தொடர்ந்து செபித்துக் கொண்டே இருந்தார்.

அவரது உடல் மிகவும் நலிவுற்று சோர்வடைந்து இருக்கக் கூடிய நிலையில் தூய மரியா வானதூதர்களோடு சேர்ந்து அவருக்கு தோன்றினார். „டோமினிக் எந்த ஆயுதத்தால் தூய மூவோரிறைவன் இந்த உலகத்தை சீர்திருத்த முயல்கிறார் என தெரியுமா“, என மரியா வினவினார். புனித டோமினிக் அன்னை மரியாவை நோக்கி „ஆம் அன்னையே! உம் மகன் இயேசுவுக்கு

www.malankaralibrary.com

அடுத்தபடியாக நீங்கள் எப்போதும் எங்கள் இரட்சிப்பின் முக்கிய கருவியாக இருந்தீர்கள்", என்று பதிலளித்தார். „புதிய ஏற்பாட்டின் அடித்தளமாக திகழ்கின்ற மீட்பின் மறைபொருளை உள்ளடக்கிய செபமாலையை நீ பாவிகளின் மனமாற்றத்திற்காக செபிக்க வேண்டும்", என்று மரியாள் புனித டோமினிக் அவர்களுக்கு கட்டளையிடுகின்றாள்.

அப்போது புனித டோமினிக் புது தெம்போடு விழித்தெழுந்து சுறுசுறுப்போடு பேராலயத்தை நோக்கி ஓடுகிறார். அவர் செல்லுகின்ற போது வானதூதர்கள் ஆலய மணிகளை ஒலிக்கச் செய்தவாறு ஊர் மக்கள் அனைவரையும் ஆலயத்திற்கு அழைக்கின்றனர்.

பெரும் கூட்டம் அலைமோதியது. புனித டோமினிக் ஆலயத்தில் உரையாற்றுவதற்கு ஆரம்பிக்கின்றார். உடனடியாக பெருங்காற்று வீசியது. பூமி நடுநடுங்கியது. சூரியன் இருள ஆரம்பித்தது. இடி மற்றும் மின்னலோடு மழை பொழிய ஆரம்பித்தது. அனைவரும் பயத்தால் நடுநடுங்கினர். இத்தருணத்தில் ஆலயத்தில்

www.malankaralibrary.com

அமைக்கப்பட்டிருந்த அன்னை மரியாவின் படத்திலிருந்த மரியாவின் கைகள் பாவிகளின் பழிவாங்கலைக் குறைக்க மூன்று முறை தன் கைகளை வானகத்தை நோக்கி உயர்த்தி செபிப்பதாகவும் அவர்கள் கண்டார்கள்.

இத்தருணத்தில் புனித டொமினிக்கிடம் செபமாலையை மரியா தன் கைகளால் வழங்கியதாக நம்பப்படுகிறது. புனித டோமினிக் அந்த இடத்திலிருந்து திருச்சபையினரோடு திரு செபமாலையை செபிக்க ஆரம்பிக்கின்றார். அத்துடன் மிகப்பெரிய இயற்கை சீற்றங்கள் மாறிவிடுகின்றன. அன்று முதல் பல இடங்களில் புனித டொமினிக் பல்வேறு மக்களின் மனமாற்றத்திற்கு அவர் உதவினார். மேலும் செபமாலை பற்றிய மறை உரைகளை நிகழ்த்த ஆரம்பித்தார்.

www.malankaralibrary.com



*புனித டொமினிக் செபமாலை பெற்றுக்கொள்ளல்*

இந்நிகழ்வுகளை சித்தரிக்கின்ற பல்வேறு விதமான ஓவியங்களும் கலை வடிவங்களும் திருச்சபைகளில் இன்றும் அதிகமாக காணக்கிடைக்கின்றன.

நம் மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டில் பயன்படுத்தப்படும் மரியன்னையின் குக்கிலியோன் எனப்படும் பாடலானது அருள்நிறை மரியே ஜெபத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டிருக்கின்றது. ஒருமுறை மரியன்னையின் குக்குலியோனையும் பரிசுத்த தேவஅன்னைவிடம் பரிந்துரை

www.malankaralibrary.com

மன்றாட்டு மாலையும் நாம் ஜெபிக்கின்ற போது ஒருமுறை ஜெபமாலை செபிப்பது போன்று நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஆனால் நம் திருவழிப்பாட்டில் குக்கிலியோன் மற்றும் பரிந்துரை மன்றாட்டு மாலையை குருவானவரின் உதவியோடு மட்டுமே நடத்தப்படுகிறது. ஆலயங்களில் மரியன்னையின் விழாக்களை கொண்டாடுகின்றபோது குருவானவரோடு இணைந்து மரியாவின் குக்கிலியோனையும் பரிந்துரை மன்றாட்டு மாலையையும் ஜெபிப்போம். ஆனால் தனிநபர் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் ஜெபமாலை செபிக்க பழகிக் கொள்வோம். நம் நடைமுறை வாழ்வில் எளிதில் பயன்படுத்துவதற்கு வசதியாக அமைந்திருப்பது ஜெபமாலை ஆகும். மனப்பாடமாக சொல்வதற்கும் அனைவரும் ஒன்றாக இணைந்து நெருக்கடி சூழ்நிலைகளில் ஜெபிப்பதற்கும் இது எளிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

செபமாலை நம் வாழ்வின் வழிகாட்டி ஆகும். செபமாலை புதிய ஏற்பாட்டின்

அடிப்படைப் பண்புகளை கொண்டுள்ளன என்பது உண்மையாகும். இவ்வாறு மீட்பு நிகழ்வுகளை செபமாலையின் போது நினைவு கூர்கின்றோம். ஒவ்வொரு மறையுண்மைகளை செபிக்கின்ற போது நாம் ஏன் அருள் நிறை மரியே செபத்தை செபிக்க வேண்டும். நெருக்கடி மேலாண்மை நேரங்களில் மரியா எப்போதும் பின்னணியில் பிறருக்கு உதவிய பல நிகழ்வுகளை நாம் விவிலியத்தில் காண்கின்றோம். அன்னை மரியாள் நம் துயர நேரங்களிலும் நமக்கு உதவி புரிவார்.

சாத்தானை எதிர்த்திட ஒரு சிறந்த போர்க்கருவியாக செபமாலை கருதப்படவேண்டும். செபமாலையைக் கழுத்தில் அணிந்து கொள்வோம். தினமும் செபமாலை செபித்து இறைவனுக்கு ஒப்புக்கொடுப்போம். இவ்வாறு இறைபக்தியை அதிகரிக்கச் செய்து இறையருளை அள்ளித்தரும் சாதனமாகவும் செபமாலை பக்தியை உணர்ந்து கொள்வோம்.

www.malankaralibrary.com

## 4. மரியா திருச்சபையின் தாய் திருநாள்

மேய் அல்லது மார்ச் மாதத்தில் அகில உலகமே ஒவ்வொரு நாட்டு வழக்கத்திற்கேற்ப ஒரு நாளை அன்னையர் தினமாக குறிப்பிட்டு கொண்டாடி வருகின்றது. இந்நாளில் பிள்ளைகளும் தந்தையர்களும் அன்னையர்களுக்கு இனிப்புகள் வழங்கியும், பரிசுகள் வழங்கியும், சிறப்பு நிகழ்வுகள் வழியாக அவர்களை சிறப்பிக்கின்றனர். அவர்களுக்கு நன்றியும் தெரிவிக்கின்றனர்.

நம் திருச்சபை வாழ்வில் நம் அனைவருக்கும் ஆன்மீகத் தாயாக இருப்பவர் இறையன்னை மரியாவே ஆவார். மரியாவை நினைவு கூரும் பல்வேறு திருநாள்கள் திருச்சபையில் கொண்டாடுகின்ற போது நாமும் அவரை ஆதரித்து, நன்றிகளை தெரிவிக்கின்றோம். குறிப்பாக மரியா திருச்சபையின் தாய் என்ற திருநாள் பெந்தக்கோஸ்து திருநாளுக்குப் பின்னர் வரும் திங்கட்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.



இறைப்பற்று மிகுந்த இளமையின் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டிருந்த தாய் மரியாவை திருச்சபை தாயாகப் பெற்றுக்கொண்டது. யோவான் எழுதிய நற்செய்தி 19: 25 - 27 வரை உள்ள இறைவார்த்தைகளில் இக்கருத்தை வாசிக்கக் கேட்டிருக்கின்றோம். அவற்றைக் குறித்த மறையுரைகளையும் கேட்டிருக்கின்றோம். கிறிஸ்து இறப்பதற்கு முன் கடைசியாக சிலுவையில் வைத்து கூறிய மூன்றாவது வார்த்தைகளாக இவை

குறிப்பிடப்பட்டிருக்கின்றன. „இதோ உன் மகன். இதோ உன் தாய்“. இந்த வார்த்தைகள் பல்வேறு கிறிஸ்தவ இறையியலுக்கு அடித்தளமாகவும் அமைந்திருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட அன்பு நிறைந்த வாழ்க்கையில் இந்த வார்த்தைகள் வாயிலாக எந்த அளவுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய தாயை அன்பு செய்து வாழ்ந்து வந்தார் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

யூத சமூகத்தில் கணவர் இறந்த பின்னர் தாயைக் கவனிக்கும் பொறுப்பு அந்த குடும்பத்தில் உள்ள மூத்த மகனைச் சார்ந்ததாகும். யோசேப்பின் இறப்பிற்குப் பின்னர் இயேசு கிறிஸ்து தன்னுடைய தாய் மரியாவை கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தார். கிறிஸ்துவும் இறக்கக்கூடிய இவ்வேளையில் கைவிடாமல் மீண்டும் கவனிப்பதற்காக திருத்தூதர் யோவானிடம் தன்னுடைய தாயை முழுவதுமாக ஒப்படைக்கிறார். „இதோ உன் மகன்“ என்றும் „இதோ உன் தாய்“ என்றும் அவர்களிடையே உள்ள உறவை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

www.malankaralibrary.com

தன் தாயை முதுமையில் பராமரிக்கும் எண்ணத்தை இவ்வாறு பொறுப்புணர்வோடு வெளிக்காட்டுகின்றார்.

அன்பான சகோதர சகோதரிகளே இன்றைய கால கட்டத்திலேயே நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் நம்முடைய சமூகங்களில் நம்முடைய குடும்பங்களில் எவ்வாறு நாம் தாயோடு அன்பு காட்டுகின்றோம்? தாய்ப்பாசத்தை நாம் எவ்வாறு உணர்ந்து கொள்ள வேண்டும்? எவ்வாறு நாம் தாயோடு அன்பு காட்டுவது?

தாயிடம் அன்பு காட்டுவதற்காக ஏழு வழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன:

முதலாவதாக: நாம் நம் தாயை **வாய்மொழியாக அன்பு செய்ய வேண்டும்**: என்னுடைய பாசம் உன் மீது இருக்கிறது என்று நம்முடைய வாய்வழியாக வார்த்தைகள் வழியாக வெளிப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக: **உடல்ரீதியாக நாம் அன்பு செய்ய வேண்டும்**: தாயோடு அன்புறவில் தாய்ப் பாசத்துடன் இணைந்து இருக்க வேண்டும். தாயை கட்டி அணைத்து முத்தமிட வேண்டும். அலுவலகம் அல்லது

www.malankaralibrary.com

பள்ளிக்கூடத்திற்கு செல்வதற்கு முன்னாலும் திரும்பி வந்த பின்னரும் தாயை கட்டி அணைத்து முத்தமிட்டு அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக: **பொறுமையோடு அன்பு செய்ய வேண்டும்:** நமக்கு தேவையான உணவு, நோய்வாய்ப்பட்டிருக்கும் போது கவனித்தல், படிக்க வைத்தல், ஆறுதல் தேவைப்படுகின்ற போது கட்டி அணைத்து ஆக்கமும் ஊக்கமும் தந்து மனதளவில் தைரியப்படுத்துதல் ஆகிய தாயின் செயல்களை பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும், அவ்வாறு நாம் பொறுமையாக அவரிடம் அன்பு காட்டுவதற்கும் தயாராக வேண்டும்.

நான்காவதாக: **கவனமாக அன்பு செய்ய வேண்டும்:** தாய் சொல்லக் கூடிய மற்றும் செய்யக் கூடிய காரியங்களை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். பல குடும்பங்களிலும் தாய் தன்னுடைய உழைப்பின் பயனாக கஷ்டப்பட்டு செய்யக்கூடிய வேலைகளை பிள்ளைகள் கவனிப்பாரின்றி இருக்கக்கூடிய

வேளையில் தான் தாயைப் பிரிந்து வாழக் கூடிய நிலைகள் ஏற்படுகின்றன.

ஐந்தாவதாக: **நன்றியோடு அன்பு செய்ய வேண்டும்** ஒரு தாய் கருத்தரித்து குழந்தையை பெற்றெடுக்க செய்வதே இந்த உலகத்தில் உள்ள மிகப்பெரிய ஒரு வேதனையாக கணக்கிடப்படுகிறது. இந்த வேதனையை தன்னுடைய பிள்ளைகளுக்காக அந்த தாய் அதனை ஏற்றுக் கொள்ளுகின்ற போது அதனை நன்றியோடு நினைவு கூருவதற்கு தயாராக இருக்க வேண்டும்.

ஆறாவதாக: **தாராளமாக அன்பு செய்ய வேண்டும்:** ஒரு தாய் தன்னுடைய வாழ்வில் குழந்தைகளை வளர்ப்பதற்காக செய்திருக்கக்கூடிய சேவைகளை எண்ணுகின்ற போது ஒரு போதும் அதற்கு விலை மதிக்க முடியாத மதிப்பு இருந்து கொண்டிருக்கின்றது. இந்த தாய்க்கு நாம் செய்யக்கூடிய பிரதிபலன் என்னவென்றால் அவரை அன்பு செய்கின்றபோது தாராள மனதோடு அன்பு செய்ய வேண்டும்

ஏழாவதாக: **மரியாதையோடு அன்பு செய்ய வேண்டும்:** தாய் கூறுகின்ற

www.malankaralibrary.com

வார்த்தைகளுக்கு நாம் மதிப்பு கொடுக்க வேண்டும். அனுபவங்களின் வாயிலாக அவர்கள் கூறும் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுப்பதன் வழியாக நாம் அவரை அன்பு செய்கிறோம் என்பதை வெளிக்காட்ட முடிகிறது.

இவ்வாறாக நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் நம் தாயை வாய்மொழியாக, உடல்ரீதியாக, பொறுமையாக, கவனமாக, நன்றியுடன், தாராளமாக, மரியாதையோடு அன்பு செய்வதற்கு தயாராக வேண்டும். அப்போது நாம் வாழும் குடும்பமானது சமூகத்திலேயே மிகவும் விலை உயர்ந்த குடும்பமாக மாறும் என்பதில் ஐயமில்லை. ஒரு தாய் தான் குடும்பத்தில் குலவிளக்காக அமைந்திருக்கின்றாள்.

அன்பான சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்து தன்னுடைய இறப்பின் நிலையிலும் தாயை அவர் விட்டுவிடவில்லை. பத்திரமாக திருத்தூதர் யோவானிடம் ஒப்படைக்கின்றார்.

www.malankaralibrary.com

இன்றைய காலத்தில் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை கூடி வருகின்றன. பிள்ளைகளுக்கு தன்னுடைய பெற்றோரை கவனிப்பதற்கு நேரம் இல்லை என்று கூறிக் கொண்டிருக்கின்றார்கள். முதுமையில் சொந்த வீடுகளிலேயே தங்க வைத்து அன்பை காட்டுவதற்கும் பராமரிப்பதற்கும் பதிலாக முதியோர் இல்லங்களில் பெற்றோர்களை விட்டுச் செல்லக்கூடிய ஒரு நிலையானது ஏற்படுகிறது.

நிச்சயமாக எப்போது நாம் நம்முடைய பெற்றோர்களுக்கு அன்பு காட்டுகின்றோமோ, அப்போது தான் இறைவனுடைய அன்பை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இறைவன் நம்மிடம் காட்டக்கூடிய பாசத்தையும் உணர்ந்து கொள்ள முடியும். பெற்றோர்களோடு நாம் காட்டக்கூடிய கரிசனை வழியாக பெற்றோர்களை கவனிப்பதின் வழியாக மட்டுமே இறைவனின் அன்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

மரியாவின் விழாவை கொண்டாடக் கூடிய இந்த நாளில் ஆண்டவர் இயேசு

www.malankaralibrary.com

கிறிஸ்து நமக்கு காட்டித் தந்த வாழ்க்கையின் வழியாக நம் குடும்பங்களில் நாமும் நம் தாயை அன்பு செய்வதற்கும், பராமரிப்பதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் தயாராவோம். எப்போதும் நம்முடைய தாயை வாய்மொழியாகவும், உடல்ரீதியாகவும், பொறுமையாகவும், கவனமாகவும், நன்றியோடு, தாராளமாகவும், மரியாதையோடும் அன்பு செய்வதற்கு வேண்டிய அருள் வரம் எல்லாம் வல்ல இறைவன் தருவதற்காக வேண்டி தொடர்ந்து நாம் மன்றாடுவோம்.

## 5. மரியாவின் புகழ்ச்சித் திருநாள்

மரியா நம் ஆண்டவரின் தாய் என்பதன் மிக எளிதான பொருள் என்னவென்றால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தாய் மரியா ஆவார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து என்னும் இறைவனுக்கு மனித உயிர் வழங்கி ஈன்றெடுத்த அவரது தாய் மரியாவை இறையன்னை என்பதை குறிப்பிடுகின்ற

www.malankaralibrary.com

திருநாளுக்கு பெயர் தான் நம் ஆண்டவரின் தாய் மரியாவின் புகழ்ச்சித் திருநாள் என்பது பொருள்.

மேற்கு திருச்சபைகளில் இந்தத் திருவிழாவானது மிக முக்கியமான திருநாளாக ஜனவரி மாதம் முதல் நாளில் கொண்டாடப்படுகிறது. ஒரு சில பகுதிகளில் இந்நாள் கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டிய கடன் திருநாளாகவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் கிழக்கு மரபு திருச்சபையைச் சார்ந்த நம் திருவழிபாட்டில் இந்த திருநாளை டிசம்பர் மாதம் 26ஆம் நாள் இறை அன்னையின் புகழ்ச்சித் திருநாள் என்ற பெயரில் நாம் கொண்டாடுகின்றோம். கோத்திக் திருச்சபையானது இந்த திருநாளை ஜனவரி மாதம் 16 ஆம் நாளில் கொண்டாடுகின்றது. மரியன்னை வழியாக இறைமையும், மனிதமும் இணைந்தது. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் உருவான “அன்னை மரியா இறைவனின் தாய்" என்ற பெருவிழாவை திருச்சபை கொண்டாடி கொண்டாடி மகிழ்கின்றது.

www.malankaralibrary.com

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் Ø அன்னை மரியாவை தன் தாயாக உணராத கிறிஸ்தவர்கள், அனாதைகள்" என்று குறிப்பிடுகிறார். அன்னை மரியா, முதல் நற்கருணை பேழையாக இருந்து, இயேசுவை சுமந்தவர். அகிலத்தை ஆள்பவரை தன் உதரத்தில் தாங்கியவர். கருவை சுமக்கும் தாய்க்கு, குழந்தை ஒரு சுமை இல்லை. இயேசுவை தன் உதரத்தில் மட்டுமல்ல, தன் உள்ளத்திலும் சுமந்தவள் அன்னை மரியா. இயேசுவுக்கும் மரியாவுக்கும் உள்ள உறவு, மனிதம் சார்ந்த உறவு மட்டுமல்ல, அதையும் கடந்த அதிசயமான, அற்புதமான இறை உறவு ஆகும்.

அன்னை மரியா, "இறைவனின் தாய்" என்ற இவ்விழா இறையியல் அடிப்படையில், ஆழமான கிறிஸ்தியல் மற்றும் மரியாளியல் சிந்தனைகளை அடிப்டையாகக் கொண்டது. நெஸ்டோரியஸின் தப்பறைக் கோட்பாட்டின்படி, இறைவனின் தாய் என்பதற்கு பல்வேறு விதமான குழப்பமான கருத்து சூழ்நிலைகள் தொடக்ககால திருச்சபை முதலே நடைபெற்று வந்தன. இறை அன்னை ஆண்டவரின் தாய் என்னும்

www.malankaralibrary.com

சிந்தனையை வெளிப்படுத்துவதற்காகவே திருச்சபை துணிவாக நின்றது. ஒரு சாதாரண மனிதப் பெண்மணியான மரியா, இயேசுவின் மனித இயல்புக்கு மட்டும் தான் தாயா? அல்லது இறைத்தன்மை இயேசுவின் பிறப்பிற்கு பின்னர் அவரிடம் ஒட்டிக்கொண்டதா? போன்ற வினாக்களுக்கு கி.பி 431இல் கூடிய எபேசு மாமன்றம், ஒரு தெளிவான விடையை தந்தது.

„தியோதோக்கோஸ்" என்னும் கிரேக்கச் சொல் மூலம் எபேசு திருச்சங்கம் மிகப்பெரிய உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியது. தியோ என்றால் கடவுள் என்பது பொருள். தோக்கோஸ் என்றால் தாங்குபவர் என்பது பொருள். இவ்வாறாக மரியாள் இறைவனை தாங்கியவள் என்ற அர்த்தத்தில் மரியாள் தியோதோக்கோஸ் என்ற சொல்லின் வழியாக விளக்கப்பட்டார். சுறியானி திருவழிபாட்டு மரபில் யொல்தாஸ் ஆலோஹோ என்ற சொல்லை மரியாள் இறைவனின் தாய் என்பதற்கு இணையாகப் பயன்படுத்துகின்றோம்.

www.malankaralibrary.com

இயேசு கடவுளும் மனிதனுமானவர். அவரில் இரு இயல்புகளும், கருவாக மரியாவின் வயிற்றில் மனுவுரு எடுத்த நொடிப்பொழுதில் இணைந்தன. இறை மனித இயல்புகளைக் கொண்ட, இறைமகன் இயேசுவை, தன் உதரத்தில் சுமந்து கருவறையில் வைத்து காத்ததனால், அன்னை மரியா "இறைவனின் தாய்" என்று ஐயமின்றி நம்மால் கூற முடியும்.

மரியாவை இறைவனின் தாயாக, முதன்முதலில் உணர்ந்து கொண்டவர் எலிசெபெத்து ஆவார். "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? என்று எலிசெபெத் கூறுகிறார்" (லூக்கா 1:43). அப்போதே மரியா ஆண்டவரின் தாய் என்பது வெளிப்படுத்தப்பட்டது. யோவான் நற்செய்தி 1:14 ல் உள்ளதைப் போன்று "வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார்".

அதாவது இறைத்தன்மை கொண்ட திருவாக்கு, அன்னை மரியா வழியாக உருபெற்றது. ஆண்டவர் இயேசு, தன் தாயிடமிருந்து, மனிதச்சாயலை பெறுகிறார். இவ்வாறு ஆண்டவரின்

மீட்புத்திட்டம் நிறைவேற மரியா கருவியாக விளங்குகிறார்.

1. ஏவாள் இறைக்கட்டளையை மீறினாள்.
2. சாரா இறைவார்த்தைகளுக்கு ஐயங்கொண்டாள்.
3. ஆகார் இறைவனுக்கு எதிராக தன் மகனையே விட்டு விடத் துணிந்தாள்.
4. யோபுவின் மனைவி இறைவனை சபிக்குமாறு பரிந்துரைத்தாள்.
5. லோத்தின் மனைவி இறைச் சொல்லைக் கேட்காது உப்பு தூணானாள்.
6. மோசேயின் சகோதரி மிரியாம் இறைநம்பிக்கை கொள்ள மறுத்தாள்.
7. இராக்கேல் இறைவனை நம்பிடத் தவறினாள்.

ஆனால் மரியாவோ உம் விருப்பப்படியே நிகழட்டும் என தன்னையே முழுவதுமாக இறைவனுக்கு சமர்ப்பித்து இறைவனின் தாயாகும் பெரும்பேற்றை பெற்றுக் கொள்கிறாள். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இறைவனின் தாய் அன்னை மரியாவை நாம் நம் திருவழிபாட்டிலும் இறைவனின் தாயாகவே அழைத்து

www.malankaralibrary.com

பாடல்களிலும் ஜெபங்களில் மன்றாடுகின்றோம்.

ஒரு தாயின் பண்பு என்பது எப்போதும் முன்னிலையில் வந்து நின்று கொண்டு தம்பட்டம் அடிக்க கூடியது அல்ல. மாறாக பின்னணியில் திரைக்குப் பின்னே நமது வாழ்வின் வெற்றிக்கு உதவி புரிபவர். இவ்வாறு தான் அன்னை மரியாவும் இயேசுவின் வாழ்க்கையிலும் செயல்பட்டார். கானாவூர் திருமண வீட்டிலும் இயேசுவின் சிலுவை மரண நேரத்திலும் பல்வேறு வாழ்க்கை நிகழ்வுகளிலும் மரியா முன்னணியில் அல்ல பின்னணியில் நின்று கொண்டே இயேசுவுக்கு உறுதுணையாக நின்றாள்.

ஒவ்வொரு ஆண்மகனின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண்மணி இருப்பாள் என்னும் கூற்றுக்கு ஏற்ப அன்னை மரியாள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு வாழ்க்கை நிகழ்வுகளுக்கும் பின்னணியில் இருந்திருக்கின்றார். நம் ஆண்டவரின் தாய் மரியா திருச்சபை மக்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் தாய் ஆவாள். அவரவது

www.malankaralibrary.com

மக்களாகிய நாம் மரியாவின் பரிந்துரையை வேண்ட முயல்வோம். அவர் இறைவனிடமிருந்து ஆசியை நிச்சயமாக நமக்குப் பெற்றுத் தருவார்.

## 6. வியாகுல அன்னை திருநாள்

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே திருச்சபை தாய் வருடந்தோறும் செப்டம்பர் மாதம் பதினைந்தாம் நாள் வியாகுல அன்னை மரியாவின் விழாவை கொண்டாடி வருகின்றது. துயருறும் அன்னை மரியாவின் திருநாள் எனவும் இத்திருநாள் பெயர் கொண்டுள்ளது. வியாகுல அன்னை என்பது அன்னை மரியாவுக்கு வழங்கப்படும் முக்கிய பெயர்களில் ஒன்று ஆகும். குறிப்பாக அன்னை மரியாள் தனது வாழ்வில் கிறிஸ்துவின் மீட்பு நிகழ்வுகளோடு ஒன்றிணைந்தவாறு தான் அனுபவித்த ஏழு துயரங்களை முன்னிட்டு வியாகுல அன்னை என்று பெயரிடப்பட்டுள்ளது. வியாகுல

www.malankaralibrary.com

அன்னை மரியா தனது வாழ்க்கையில் அவர் சந்தித்த ஏழு துயரங்களையும் ஏழு வாள்களைப் போன்று அவருடைய நெஞ்சில் குத்தி ஊடுருவுவதைப் போன்று படங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

வியாகுல அன்னையின் பெயரில் ஏராளமான திருத்தலங்கள் நம் இந்திய நாட்டிலும் குறிப்பாக நமது தமிழகத்திலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வியாகுல அன்னை போலந்து மற்றும் ஸ்லோவாக்கியா போன்ற பல நாடுகளின் பாதுகாவலியாக உள்ளார்.

ஏழு துயரங்கள். முதலாவதாக: சிமியோனின் இறைவாக்கு, இரண்டாவதாக: குழந்தையுடன் எகிப்துக்குத் தப்பி ஓடுதல், மூன்றாவதாக: மூன்று நாள்கள் இயேசுவை காணாமல் திகைத்தல், நான்காவதாக: இயேசு சிலுவை சுமந்து கொண்டு சென்ற நிகழ்வை காணல், ஐந்தாவதாக: இயேசுவின் சிலுவை மரண வேளை, ஆறாவதாக: தனது மடியில் அன்பு மகனை கிடத்தியவாறு துயரக் கண்ணீர் வடித்தல், ஏழாவதாக: இயேசுவை அடக்கம் செய்தபின் அன்னை அனுபவித்த

www.malankaralibrary.com

துயரம். இவற்றை நினைவு கூர்ந்து துன்பத்தை தாங்கிக் கொண்ட மரியாவை போற்றக் கூடிய விதத்தில் திருச்சபையில் வியாகுல அன்னையின் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது.



கேரளாவின் திருச்சூரில் தமிழக கட்டிடக் கலைஞர்களால் கட்டப்பட்ட புனித வியாகுல அன்னை பெருங்கோவில் அன்னையின் பெருமைகளை உலகிற்கே எடுத்துக்காட்டும்.

www.malankaralibrary.com

செப்டம்பர் மாதத்தின் எட்டாம் நாளில் மரியாவின் பிறப்பு விழாவில் நலம் தருதல் என்னும் மரியாவின் தாய்மைப் பண்பையும், பதினைந்தாம் நாளில் துயர் துடைத்தல் என்ற மரியாவின் தாய்மைப் பண்பையும் புகழ்கிறோம்.

திருச்சபை வரலாற்றில் முதன்முதலாக, பன்னிரண்டாம் நூற்றாண்டில் அன்னை மரியா அனுபவித்த துயரங்களை அடிப்படையாகக் கொண்ட பக்திமுயற்சி கிறிஸ்தவர்களிடையே தோன்றியது.

இத்தாலியின் பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த ஏழு வணிகர்களுக்கு அன்னை மரியாள் தனித்தனியே காட்சியளித்து செனாரியோ என்ற மலைக்கு வரும்படி அழைத்தார். அங்கே ஒன்று கூடிய எழுவரும் அன்று முதல் மக்களைப் பாவம் மற்றும் தீமையிலிருந்து விடுவிப்பதற்காக ஜெபிப்பதையும், வியாகுலங்களின் பக்தியைப் பரப்புவதையும், தங்களது முதற்கடமையாகக் கொண்டிருந்தனர்.

அவர்களது வாழ்வு மரியன்னைக்கு ஊழியம் புரிவதாக இருந்ததால் அன்னை

www.malankaralibrary.com

தாமே வெளிப்படுத்திய "மரியின் ஊழியர்" என்ற பெயரையே தமதாக்கிக் கொண்டனர். ÀÃŒE முதல், ‘மரியாயின் ஊழியர்’ சபையினர் வியாகுல அன்னை பக்தியை தங்கள் முதன்மை பக்தியாக தேர்ந்தெடுத்து அதனை பரப்பினர்.

தொடர்ந்து 1423ல் கூடிய கொலோன் மன்றம், ‘மரியாவின் வியாகுலங்கள்’ என்ற திருநாளை உருவாக்கியது. 1668ஆம் ஆண்டு வியாகுல அன்னை பக்திக்குரிய திருப்பலி செபங்களுக்கு 1673ல் திருச்சபை அனுமதி வழங்கியது. 1674ல், ஜெர்மானியப் பேரரசு முழுவதும் மரியாவின் வியாகுலங்கள் விழாவை சிறப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. À–” Ãல் திருத்தந்தை பன்னிரண்டாம் இன்னசென்ட், இவ்விழாவை செப்டம்பர் மூன்றாம் ஞாயிறன்று மரியாயின் ஊழியர் சபையினர் கொண்டாட அனுமதி வழங்கினார்.

À“ ..“ல் நெப்போலியனால் கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறையில் இருந்து, பின்னர் விடுதலையான திருத்தந்தை ஏழாம் பத்திநாதர், தமது துயரங்களின்

நினைவாக 1814 செப்டம்பர் பதினெட்டாம் நாளில், நாடு கடத்தப்பட்டதிலிருந்து மீண்டு, உரோமை நகர் வந்தடைந்தமைக்கு நன்றியாக வியாகுல அன்னைக்கு விழா கொண்டாடும்படி அறிவித்து 'வியாகுல அன்னை' என்ற பெயரில் இவ்விழாவை திருச்சபை முழுவதற்கும் விரிவாக்கினார். À"..". மேய் பதிமூன்றாம் நாளில் திருத்தந்தை புனித பத்தாம் பத்திநாதர், இத்திருநாளை பெரிய விழாவாக உயர்த்தி செப்டம்பர் பதினைந்தாம் நாளில் கொண்டாட ஆணையிட்டார். 1969ல் திருத்தந்தை ஆறாம் பவுல், வியாகுல அன்னை திருநாளை பொது நினைவு தினமாக மாற்றினார்.

வியாகுல அன்னை 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுவோடு துணை நின்று அவரது துன்பத்தில் பங்கேற்றார். இன்றைய நவீன கால சிலுவைகளாகிய வறுமை, பிணி, அறியாமை, ஏமாற்றம், வன்முறை, தீவிரவாதம், இயற்கையை அழித்தல் மற்றும் கலாச்சாரச் சீரழிவு போன்ற சிலுவைகளில் அன்றாடம் மக்கள் அறையப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே இத்தகைய சிலுவைகளிலிருந்து மக்களை மீட்க

www.malankaralibrary.com

ஒவ்வொரு கிறிஸ்தவனும் வழி காண வேண்டும். அதற்கு முன்னுதாரணமாய் இருப்பது நம் வீரத்தாயாம் வியாகுல அன்னை மரியாவே ஆவார்.

## 7. பாத்திமா அன்னை திருநாள்

பாத்திமா அன்னையின் திருத்தலம் போர்த்துக்கல் நாட்டின் மத்திய பகுதியில் அதன் தலைநகரான லிஸ்பனுக்கு வடக்கே 130 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. À” À–≈ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி முதல் அக்டோபர் மாதம் 13ஆம் தேதி வரை லூசியா டி சான்றோஸ், ஜெசிந்தா மார்ட்டோ, பிரான்சிஸ்கோ மார்ட்டோ என்ற ஆடு மேய்க்கும் மூன்று சிறார்களுக்கு அன்னை மரியா காட்சியளித்தார்.

இரண்டாம் உலகப் போரைப் பற்றியும் ரஷ்ய நாட்டின் மனமாற்றத்தை பற்றியும் குறிப்பிட்டவை அப்படியே நடந்ததால் பாத்திமா அன்னையின் திருத்தலம் உலக அளவில் பெரும்புகழ் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. பாத்திமா அன்னையின்

www.malankaralibrary.com

திருவிழாவானது மேய் மாதம் 13ஆம் தேதி சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் பதிமூன்றாம் நாள் பாத்திமா திருத்தலத்தில் முக்கியமான சிறப்பு திருவழிபாட்டு நிகழ்வுகளுடன் கொண்டாடப்படுகின்றது. அந்நாட்களில் இரவு நேரத்தில் நடத்தப்படும் திருப்பலிக்குப் பின்னர் ஜெபமாலைப் பவனியில் பாத்திமா அன்னையின் உருவத்தை ஏந்தியவாறு நடந்து செல்லும் காட்சி மிக அருமையான ஒன்றாகும். அனைவரும் எரியும் மெழுகுவர்த்தியுடன் நடந்து வருகிறார்கள். „மரியே வாழ்க“ என அர்த்தம் கொண்ட „ஆவே மரியா“ எனக் கூறுகின்ற போதும் பாடுகின்ற போதும் தங்களுடைய கைகளில் இருக்கும் எரியும் மெழுகுவர்த்தியை உயர்த்தி காட்டுகின்ற நிகழ்வு காண்பதற்கு மிகவும் அரிதானதாகும்.

www.malankaralibrary.com



À" À–ஆம் ஆண்டு வானதூதர் ஒருவர் தான் சஅன்னைனத்தின் தூதர் என்று தன்னை அறிமுகப்படுத்தியவாறு மூன்று சிறார்களுக்கும் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது பாத்திமா பகுதியில்

www.malankaralibrary.com

தோன்றினார். 1917-ஆம் ஆண்டு மேய் 13ஆம் தேதி மீண்டும் வானதூதர் நற்கருணையை அவர்களுக்கு காண்பித்தவாறு இம்மூவருக்கும் தோன்றினார். வானதூதர் மறைந்தவுடன் அன்னை மரியா அவர்களுக்கு ஒரு புதரின் மேல்பகுதியில் காட்சியளித்தார். „நான் ஜெபமாலை அன்னை“ என தன்னை அறிமுகம் செய்து கொண்ட பின்னர் ஒவ்வொரு மாதமும் 13ஆம் தேதி இந்த இடத்தில் வரவேண்டும் என்று மரியா அவர்களுக்கு கூறினார். பாவிகளுக்காக எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று அன்னை மரியா மூவருக்கும் சிறு ஜெபத்தை கற்பித்தார். அக்டோபர் 13ஆம் தேதி ஒரு சூரிய அதிசயம் நடைபெறும் என்றும் முன்னறிவித்தார். அவ்வாறு 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் நாளில் சுமார் 70,000 பேர் சூரியன் வேகமாக சுழன்று கொண்டிருந்த சூரிய அதிசயத்தைக் கண்டனர். அப்போது பெருமழை பொழிந்தது. ஆனால் அன்னை மரியா சிறார்களுக்கு காட்சி அளித்த இடத்தில் மட்டுமே மழை பொழியாமல் உலர்ந்து காணப்பட்டது. அனைவரும் மனமாற்றம் அடைய செபிக்க வேண்டும்

www.malankaralibrary.com

என்று மரியா சிறார்களுக்கு கூறினார். தொடர்ந்து பல நாட்களில் இச்சிறார்கள் திருக்காட்சிகளை கண்டனர். இலட்சக்கணக்கான திருப்பயணிகள் பாத்திமா நகரை நோக்கி இறையன்னையின் பரிந்துரை வேண்டி நாள்தோறும் திருப்பயணம் மேற்கொள்கின்றனர்.

மரியா காட்சி அளித்த பகுதியில் ஒரு சிற்றாலயம் நிறுவப்பட்டது. மக்கள் அதிகமாக வந்து ஜெபிப்பதற்கு வசதியாக சிற்றாலயம் விரிவாக்கம் செய்யப்பட்டது. மக்கள் வருகை அதிகமான காரணத்தினால் சிற்றாலயத்திற்கு பக்கத்திலேயே இன்னொரு மிகப்பெரிய செபமாலை அன்னை ஆலயமானது கட்டப்பட்டது. திருவழிபாட்டு நிகழ்வுகள் அந்த ஆலயத்தில் நடைபெறுகின்றன. இந்த சிற்றாலயத்தில் எப்போதும் மக்கள் ஜெபமாலை ஜெபிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் இரவு 9 மணி அளவில் சிற்றாலயத்தில் ஜெபமாலையும் பாத்திமா அன்னையின் உருவத்தை தாங்கிய திருப்பவனியும் நடத்தப்படுகின்றது. மக்கள் ஆர்வத்தோடு

www.malankaralibrary.com

எரியும் மெழுகுவர்த்திகளுடன் கலந்து கொள்கின்றனர்.

பாத்திமா அன்னையின் சிற்றாலயத்தை சுற்றி முழந்தாள் படியிட்டு கால் முட்டினால் நடந்து வரக்கூடிய விதத்தில் மார்பிள் தரையானது பதிக்கப்பட்டுள்ளது. எப்போதும் திருப்பயணிகள் முழந்தாளிட்டு சிற்றாலயத்தை மூன்று முறை சுற்றி வந்து நேர்ச்சைகளை செலுத்துவார்கள். குழந்தைவரம் வேண்டியவர்கள் அல்லது குழந்தைகளுடைய நோய் மாறுவதற்காக வேண்டியவர்கள் தம் குழந்தையை தோளில் சுமந்தவாறு கால் முட்டினால் சுற்றிவந்து ஜெபிக்கிறார்கள். ஏறக்குறைய 500 மீட்டர் தூரத்திலிருந்தே கால் முட்டினால் நடக்கக்கூடிய மார்பிள் தரைப் பகுதியானது ஆரம்பமாகின்றது. பல நபர்களும் தங்களுடைய கால் முட்டில் பாதுகாப்புக்கவசம் ஒன்றை பயன்படுத்துகிறார்கள். பாதுகாப்பு கவசம் இல்லாமல் வெற்று கால் முட்டினால் நடந்து நேர்ச்சைகளை செலுத்தக்கூடிய திருப்பயணிகளும் ஏராளமாக உள்ளனர்.

www.malankaralibrary.com

அன்னையின் சிற்றாலயமும் அன்னையின் பசிலிக்கா ஆலயம் அமைந்திருக்கக் கூடிய பகுதியில் குளிர்காலத்தில் அனைவரும் திருப்பலியில் பங்கேற்பதற்கு வசதியாக மிகவும் பிரம்மாண்டமான தூய மூவோரிறைவன் ஆலயமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் நுழைவு வாயிலில் உலகின் பல்வேறு மொழிகளில் விவிலிய வாசகங்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இந்திய நாட்டு மொழியான இந்தி மொழியிலும் நம் தமிழ் மொழியிலும் விவிலிய வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஒன்பதாயிரம் நபர்கள் அமரும் விதத்தில் இந்த பிரம்மாண்டமான ஆலயமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. பீடப்பகுதியில் 100 குருக்கள் அமரும் வசதிகள் உள்ளன. திருவழிபாடுகளின் போது தன்னார்வ தொண்டர்கள் இந்த ஆலயத்தின் காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஆர்வத்தோடு செயல்பட்டு வருகின்றனர்.

பாத்திமா திருத்தலத்திலிருந்து ஏறக்குறைய இரு கிலோமீட்டர் தொலைவில் மூன்று சிறுவர்களும் தங்கி வாழ்ந்த வீடுகள்

www.malankaralibrary.com

அமைந்துள்ளன. இப்போதும் வீட்டின் பகுதிகளும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதிகளில் மூவரின் உறவினர்களையும் இப்போதும் நாம் சந்திக்க முடியும். வானதூதர் நற்கருணையோடு மூவருக்கும் காட்சியளித்த இடம் அருமையாக பராமரிக்கப்பட்டு அனைவருடைய பார்வைக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஏறக்குறைய இரண்டு கிலோமீட்டர் தொலைவில் சிலுவைப் பாதை ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஹங்கேரியன் கல்வாரி சிலுவைப் பாதை எனப் பெயர். ஹங்கேரிய மக்கள் தங்களின் நன்றியறிதலுக்காக கல்வாரி எனப்படும் மலையின் மீது சிலுவைப்பாதையை வடிவமைத்துள்ளனர். அமைதியான சூழ்நிலையில் நடந்து செல்வதற்கு வசதியாக பாதை உள்ளது. பாதையின் இரு பகுதிகளிலும் ஒலிவமரத் தோப்புகள் உள்ளன. ஜெபிப்பதற்கு மிகவும் தூண்டக்கூடிய விதத்தில் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திருக்காட்சிகளைக் கண்ட மூவருள் பிரான்சிஸ்கோ மார்ட்டோ தனது பத்தாம்

www.malankaralibrary.com

வயதிலும் ஜெசிந்தா தனது ஒன்பதாம் வயதிலும் கடின நோயினால் பாதிக்கப்பட்டு இறைவனடி அடைந்தனர். லூசியா பின்னர் கன்னியர் மடத்தில் சேர்ந்து ஒரு துறவியாக வாழ்ந்து தன்னுடைய 97 ம் வயதில் 2005 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

மிக முக்கியமான இவ்வன்னையின் திருத்தலத்திற்கு ஒரு முறையேனும் திருப்பயணம் மேற்கொள்ள நாம் முயல்வோம். அன்னையின் ஆசீரைப் பெற்றுக் கொள்ள முயல்வோம்.

## 8. லூர்து அன்னை திருநாள்

„லூர்து" என்ற பெயர்ச்சொல்லை நம் தமிழகத்தில் பலரும் தங்களுடைய பெயராக கொண்டுள்ளனர். லூர்து என்பது பிரான்ஸ் நாட்டில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரமாகும். அன்னை மரியாவின் திருக்காட்சியை பெற்றுக் கொண்டதனால் இவ்வூர் உலகம் முழுவதும் அறியப்படக்கூடிய ஒரு திருத்தலமாக மாறியுள்ளது.

www.malankaralibrary.com

பிரெஞ்சு மொழியில் லூர்து என்பதனை „லூர்தெஸ் - Lourdes" என்று எழுதப்பட்டாலும் லூர்து என்றே இச்சொல் உச்சரிக்கப்படுகிறது. உலகில் அதிகமான மக்கள் திருப்பயணமமெக வரக்கூடிய ஒரு முக்கிய அன்னை திருத்தலமாக லூர்து திருத்தலம் விளங்குகின்றது. லூர்து என்ற நகரில் அன்னை காட்சி அளித்ததை முன்னிட்டு இறை அன்னையை „லூர்து அன்னை" எனவே அழைக்கின்றனர்.

லூர்து நகரமானது பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் நகரில் இருந்து ஏறக்குறைய 850 கிலோ மீட்டர் தொலைவில் ஸ்பெயின் நாட்டு எல்லை அருகே அமைந்துள்ளது. ஸ்பெயின் நாட்டு தலைநகரான மாட்ரிட் நகரிலிருந்து 550 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்கின்ற போது லூர்து நகரை எளிதில் வந்தடைய முடிகின்றது.

அகில உலக திருச்சபையோடு இணைந்து மலங்கரை கத்தோலிக்க திருச்சபையும் பிப்ரவரி 11ஆம் நாளில் லூர்து அன்னையின் திருநாளை

www.malankaralibrary.com

கொண்டாடுகின்றது. மேற்குத் திருச்சபையினரின் திருவழிபாட்டில் இத்திருநாளன்று சிறப்பு செபங்கள் நடத்தப்படுகின்றன. வேளாங்கண்ணி திருத்தலத்தை ஆசியாவின் லூர்து என அழைக்கின்றனர்.

À“œ̋ஆம் ஆண்டு லூர்து என்ற ஊரின் வெளிப்பகுதியில் ஏழை குடும்பத்தை சார்ந்த பெர்னதெத்து சூபிரூஸ் என்ற 14 வயதுடைய ஒரு இளம் பெண்மணி தன்னுடைய தோழிகளோடு இணைந்து மலைப்பகுதியில் விறகு சேகரிக்கச் சென்றார். அப்பகுதியில் மிசபியேல் என்றழைக்கப்பட்ட குகை ஒன்று உள்ளது. இக்குகையின் அருகில் வந்த போது அழகிய பெண்மணி ஒருத்தி முன்பகுதியில் நிற்பதை கண்டார். வெண்ணிற ஆடை அணிந்து, தலையில் முக்காடு அணிந்ததாக, நீல நிற இடைக்கச்சை அணிந்து, ரோஜா மலர்களை தன்னுடைய பாதத்தில் கொண்டவாறு அப்பெண்மணி காட்சியளித்தாள். அப்போது தான் கண்ட காட்சியை பெர்னதெத்து தனது தோழிகளுக்கு காண்பிக்கின்றார். ஆனால் அவரது தோழிகளின் கண்களுக்கு

www.malankaralibrary.com

இக்காட்சியைக் காண முடியவில்லை. 1858ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் நாள் முதல் 1858ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் நாள் வரையிலும் மரியாள் இவ்வாறு பதினெட்டு முறை அழகிய பெண்மணியாக காட்சியளித்தாள்.

ஒருமுறை மரியா காட்சியளித்த போது இப்பகுதியில் ஓர் ஆலயத்தை நிறுவ வேண்டும் என அறிவிக்கின்றார். பெர்னதெத்து இக்கட்டளையை பங்குக் குருவானவரிடம் அறிவிக்க அவரால் நம்ப முடியவில்லை. தொடர்ந்து பல்வேறு நபர்கள் இவரிடம் கேள்விக் கணைகள் பல தொடுத்தவாறு கேலி செய்ய ஆரம்பித்தனர். இறுதியில் பங்கு குருவானவர் இவ்விடத்தில் ஆலயம் எழுப்ப வேண்டியதன் அடையாளத்தை காண்பிக்குமாறு மரியாவிடம் கேட்கச் சொல்லி அனுப்பினார்.

பெர்னதெத்து இதனை மரியாவிடம் தெரிவித்தார். மரியாவும் நீ தாகமாய் இருக்கிறாய். தாகம் தீர்க்க தண்ணீர் அருந்த கட்டளையிடுகிறார். பெர்னதெத்து அருகில் உள்ள நீரோடையிலிருந்து தண்ணீர்

www.malankaralibrary.com

அருந்துமாறு ஓட ஆரம்பித்தார். மரியாவோ அவரை தடுத்து நிறுத்தி நீ நிற்கக்கூடிய இடத்தில் மண்ணை தோண்டு அவ்விடத்தில் ஒரு நீரூற்று உருவாகும் என வெளிப்படுத்துகின்றார். பெர்னதெத்து உடனடியாக மண்ணை தோண்டுகிறார் நீரூற்றும் வெளிப்படுகிறது. இனிமையான சுவையைக் கொண்ட இந்நீரை அவரும் அருந்தினார். அன்று முதல் இன்று வரையிலும் இந்த நீரூற்று திருப்பயணிகளுக்கு தாகம் தீர்க்கும் நீராகவும் அருள் வழங்கும் நீராகவும் உள்ளது.

அக்காட்சிகளின் போது மரியா „நானே அமல உற்பவம்“ என்பதையும் வெளிப்படுத்தி ஜெபமாலை ஜெபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்து வந்தார். அன்று முதலே பெர்னதெத்து தவறாது எப்போதும் ஜெபமாலை ஜெபிக்க ஆரம்பிக்கின்றார். ஒரு கூட்டம் மக்கள் பக்தியுடன் பெர்னதெத்துதை ஆதரிக்கவும் ஆனால் ஒரு கூட்டத்தினர் இக்காட்சியின் செய்திகளை கேலி செய்யவும் செய்தனர்.

www.malankaralibrary.com

திருச்சபையின் அதிகாரிகள் பெர்னதெத்துதின் காட்சிகளின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கான பல்வேறு ஆய்வுகளை செய்ய ஆரம்பித்தனர். பெர்னதெத்துதையும் பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி ஆய்வு செய்தனர். பல நபர்களால் அவர் சித்திரவதையும் செய்யப்பட்டார். ஆனால் பெர்னதெத்து தான் பெற்றுக்கொண்ட திருக்காட்சியை சரியான முறையில் எப்போதும் எடுத்துக் கூறுவதில் மிகவும் உண்மை நிலையை கொண்டிருந்தார்.

இக்காட்சி நடைபெற்ற நாட்களில் அதிசயமாக இயற்கை மாற்றங்கள் நடைபெற்றது என்று மறைமாவட்ட ஆயரும் தெரிவிக்க தொடர்ந்து லூர்து அன்னையின் திருப்பாதத்தில் வரும் திருப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்தது.

லூர்து அன்னை திருத்தல ஆலய வளாகம் ஆனது தற்போது மிக அதிகமான சிற்றாலயங்களை கொண்டவாறு காணப்படுகிறது. இத்திருத்தல வளாகத்தின் அருகே உசே என்ற ஆறு வழிந்தோடுகிறது.

www.malankaralibrary.com

இவ்வாற்றில் குறைவான தெளிவான தண்ணீர் வழிந்து ஓடுவதை காண்பதே மிகவும் அருமையாக உள்ளது. இந்த ஆற்றின் வடக்குப் பகுதியில் தான் திருத்தலத்தின் முக்கிய வளாகங்கள் அமைந்துள்ளன.

வளாக நுழைவு வாயிலிலிருந்து லூர்து அன்னை கெபி செல்லும் வழியில் இருபக்க வழியில் மக்கள் நடமாடவும் நடுப்பகுதியில் பசும் புல் தரையும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நுழைவு வாயிலில் இருந்து தூய ஜெபமாலை அன்னை பெருங்கோவில் காண்பதற்கு அதன் வடிவமைப்பு நமது கண்களுக்கு இனிமை தருகின்றது.

திரு ஜெபமாலையின் பெருங்கோவில் (Basilica) அமல உற்பவ மரியன்னையின் பெருங்கோவில் எனவும் அழைக்கப்படுகிறது. இப்பெருங்கோவிலுக்குள் திரு ஜெபமாலையின் மறையுண்மைகள் ஒவ்வொன்றையும் விளக்கக்கடிய ஓவியங்கள் அதிகமாக வரையப்பட்டுள்ளன. மரியன்னையின் அமல உற்பவத்தை மையப்படுத்திய ஓவியங்களும் இவ்வாலயத்திற்குள் உள்ளன.

www.malankaralibrary.com

இவ்வாலயத்தின் தென்பகுதியில் லூர்து அன்னை கெபி அமைந்துள்ளது. எப்போதும் திருப்பயணிகள் கூட்டம் அதிகமாகவே இங்கு காணப்படும். தினந்தோறும் காணிக்கையாக சமர்ப்பிக்கின்ற பல்வேறு மெழுகுவர்த்திகளை ஒரு தாங்கியில் நிற்க வைத்து எரிய வைப்பதே இந்த கெபியின் மிக முக்கியத்துவம் வாய்ந்த காட்சிப் பொருள். பெர்னதெத்துக்கு மரியா காட்சி அளித்த இடத்தை மற்றும் நீரூற்றை அருகில் சென்று காண மக்கள் நீண்ட வரிசையில் எப்போதும் காத்திருப்பர்.

கெபியின் பக்கவாட்டில் திருப்பணிகள் ஆற்றை கடந்து செல்வதற்கான வழி அமைக்கப்பட்டுள்ளது. காணிக்கையாக கொண்டு வந்துள்ள மெழுகுவர்த்தியை கொளுத்துவதற்கு வசதியாக ஒரு தனிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது எப்போதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மெழுகுவர்த்திகள் இந்த கூடத்தில் எரிந்து கொண்டே இருக்கும். இப்பகுதியில் மிகப்பெரிய பசும்புல் தரை அமைக்கப்பட்டுள்ளது. திருப்பயணிகள் ஓய்வெடுக்கவும் குழந்தைகள்

www.malankaralibrary.com

விளையாடுவதற்காகவும் இப்பகுதியானது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நற்கருணை ஆலயம் ஒன்று உள்ளது. ஏராளமான சிற்றாலயங்கள் பல்வேறு பகுதிகளில் ஆலய வளாகத்துக்குள் காணப்பட்டாலும் இந்த நற்கருணை ஆலயத்திலிருந்து தான் நற்கருணைப் பவனி ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின்றது. இந்த நற்கருணை ஆராதனை பவனிக்குப் பின்னர் நோயாளிகளுக்கான சிறப்பு ஆசீர்வாதம் நடத்தப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் சக்கர நாற்காலிகளில் அமர்ந்தவாறு அன்னையின் அருள் வேண்டி இத்திருத்தலத்தை நாடி வருகின்றனர். சக்கர நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் நோயாளிகளுக்கு உதவ நூற்றுக்கணக்கான தன்னார்வ தொண்டர்கள் எப்போதும் தயாராக உள்ளனர்.

தினந்தோறும் மாலை இரவு ஒன்பது மணிக்கு பிரமாண்டமான ஜெபமாலை பவனியானது ஆரம்பமாகும். ஜெபமாலை பவனியில் கலந்து கொள்ளக்கூடிய

www.malankaralibrary.com

அனைவரும் இத்திருத்தலத்திற்கு தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்ட மெழுகுவர்த்திகளை வாங்கி பயன்படுத்துவர். மழையாக இருந்தாலும் கொடும் காற்று வீசினாலும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த பவனியில் மிகவும் உற்சாகத்தோடு பக்தியோடு கலந்து கொள்வது அனைவரும் வியக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும். பல்வேறு மொழிகளில் ஜெபமாலையின் போது அருள் நிறை மரியே ஜெபங்கள் ஜெபிக்கப்படுகின்றன.

ஐரோப்பாவில் பயில்கின்ற தமிழக குருமட மாணவர்கள் தங்களுடைய விடுமுறை நாட்களில் லூர்து நகரில் திருப்பணி செய்வதற்காக செல்வது வழக்கம். இக்காலத்தில் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியிலும் ஜெபமாலைப் பவனியின் போது அருள் நிறை மரியே ஜெபத்தை ஜெபிக்கவும் தமிழர்களாகிய நம்மால் அதனை இணைந்து ஜெபிக்கவும் முடிகின்றது. ஜெபமாலைப் பவனியின் இறுதியில் பத்தாயிரம் நபர்கள் நிற்கக் கூடிய விதத்தில் பூமிக்கடியில் கட்டப்பட்ட பிரம்மாண்டமான ஆலயத்தில்

www.malankaralibrary.com

வைத்து நற்கருணை ஆசீருடன் நிகழ்வுகள் நிறைவடையும்.

பெருங்கோவிலுக்கு வடக்குப் பகுதியில் ஒரு உயர்ந்த மலை காணப்படுகிறது. இந்த மலைப்பகுதியில் ஏறக்குறைய 2 கிலோமீட்டர் தூரம் சுற்றி வரக்கூடிய விதத்தில் சிலுவைப்பாதை நிகழ்வுகள் உருவங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆலய வளாகத்தில் சிலுவைப்பாதை நிகழ்த்துவதற்கு நிலைகள் அமைக்கப்பட்டிருந்தாலும் இந்த மலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெரிய சிலுவைப் பாதையை நடந்து ஜெபிப்பதற்கு வருகின்ற திருப்பயணிகளின் எண்ணிக்கை ஏராளமாக உள்ளன.

மேலும் லூர்து நகரைச் சுற்றி ஏராளமான மலைகள் காணப்படுகின்றன. இந்த மலைப் பகுதிகளுக்கு மேலே நடந்து செல்வதற்கும் அதனை ஒரு நிகழ்வாக நடத்துவதற்கும் சுற்றுலா மையங்கள் வசதிகள் ஏற்படுத்தியுளளன. இந்த மலை உச்சிகளில் நின்றவாறு லூர்து அன்னை திருத்தல வளாகத்தை காண்பது கண்களுக்கு மிகவும் இனிமை தரக்கூடியதாக அமைந்துள்ளது.

www.malankaralibrary.com

தமிழர்களின் வருகையும் லூர்து நகரில் அதிகமாக உள்ளன. தமிழ் மொழியில் எழுதப்பட்ட விளம்பரப் பலகைகளும் கடைப் பெயர்களும் தமிழக உணவு வகைகளும் லூர்து நகரில் நம்மால் பார்க்க முடிகின்றது.

அன்பர்களே லூர்து அன்னையின் திருப்பாதத்தில் தினந்தோறும் வரக்கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் நாமும் ஒருவராவோம். லூர்து அன்னையின் திருப்பாதம் வந்து இறைவனின் ஆசி பெற்றுக் கொள்ள நாமும் முயல்வோம்.

துணை நின்றவை

1. Short Informations are collected from Wikipedia Tamil, English, German and Malayalam Articles.
2. Many Websites of Marian Pilgrim Centres are refered.

www.malankaralibrary.com

3. For the historical details i have refered various websites of many orthodox churches and Eastern catholic churches.
4. Websites of all the above mentioned Pilgrim Centres are also refered.
5. More than 300 web pages are refered to collect materials.
6. Malankara Details are based on Liturgical Calender and Liturgical Texts in Tamil.
7. Front Cover Image of our Fatima Lady is taken from the Chapel in Derne, Dortmund, Germany.
8. Back Image is the Evening view of Basilica in Fatima.
9. All the other images are downloaded from Google search.

www.malankaralibrary.com

www.malankaralibrary.com

